## உத்தங்குடியில் வெற்றிக்கு கட்டியம்கூறும்

# தென்மாவட்டங்களின் வாக்குச்சாவடி பிரதிநிதிகளின் மாநாடு!



தென்மாவட்டங்களில் உள்ளடங்கிய 58 தொகுதிகளில் உள்ள வாக்குச் சாவடிகளில் தேர்தல் நாள் அன்று வாக்குச் சேகரிக்கும் பணியிலும், வாக்காளர்களை கண்காணிப்பதிலும் ஈடுபடவுள்ள ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி முகவர்களும், பிரதிநிதிகளும் வருகிற 21ஆம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் உத்தங்குடிப் பகுதியில் அமைந்த பிரம்மாண்டமான திறந்தவெளி அரங்கத்தில் அமைந்திருக்கும் மேடையில் வாக்குச்சாவடி பிரதிநிதிகளுக்கான ஆலோசனைகளை வழங்குவதற்காக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வரவிருக்கிறார்.

தென்பாண்டி மண்டலத்தின் தலைநகராகக் கருதப்படும் மாமதுரையில் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பெறவிருக்கும் வரலாற்று சிறப்புமிகு வெற்றிக்கு கட்டியம்கூறும் மாபெரும் நிகழ்ச்சியாக மதுரை மாநகரத்திலே இந்த நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

வாக்களிக்கும் நாளில் வாக்குச்சாவடி பிரதிநிதிகள் எவ்வாறெல்லாம் தங்களை தகவமைத்துக் கொள்ள வேண்டும், எப்படியெல்லாம் கண்காணிப்பதும், கண்காணிப்புடன் செயல்பட்டு வாக்குகளைச் சேகரிக்க வேண்டும் என்பதையும் எதிரணியைச் சார்ந்தவர்களின் சட்டத்திற்குப் புறம்பான அத்துமீறல்களை எப்படியெல்லாம் தொடர்புடைய அதிகாரிகளின் மூலம் தடுக்க வேண்டும் என்பதையும் மற்றும் பல்வேறு விவரங்களையும் தமிழ்நாட்டின் முதல்வர் தெரிவிக்கவுள்ளார்.



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

இந்த நிகழ்ச்சிக்கு ஏறத்தாழ 2 லட்சம் பேர் கூடுதலாக மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கானப் பணிகளை அமைச்சரும் மதுரை மாவட்ட கழகத்தின் செயலாளருமான மூர்த்தி இரவு பகலாக திட்டமிட்டு மேற்கொண்டுள்ளார்கள். அவர் கடந்த காலத்தில் மேற்கொண்ட இது போன்ற நிகழ்ச்சிகளுக்கானப் பணிகளுக்காக கழகத் தலைவரும் முதல்வருமான தளபதி அவர்கள் அமைச்சர் மூர்த்தியை பலபட பாராட்டியுள்ளார்கள் என்பது கடந்தகால வரலாறாகும்!

ஆனால், அவற்றையெல்லாம் மிஞ்சுகின்ற அளவிற்கு அமைச்சர் மூர்த்தி அவர்களும் அவர்களோடு இணைந்து கழகத்தினுடைய செயல்வீரர்களும் இரவு பகலாக அர்ப்பணிப்பு உணர்வுடன் கழகத் தலைவரை மகிழ்ச்சிக்க வேண்டும் என்கின்ற உயரிய உன்னதமான நோக்கத்தின் அடிப்படையில் பம்பரம்போல் சுழன்று தேனீக்கள் போல் ஓயாது பணியாற்றுகின்ற காட்சியை என்னால் காண முடிகிறது.

அமைச்சர் மூர்த்தி அவர்களும் அவரோடு இணைந்த கழகச் செயலாளர்களும் புதுப்புது யுக்திகளைக் கையாண்டு, முதல்வர் ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான வாக்குச்சாவடிப் பிரதிநிதிகளைக் கண்டு மகிழ்ச்சியினைப் பகிர்ந்து கொள்ளத்தக்க அளவிற்கு ஏறத்தாழ 1500 அடிக்கு மேல் உள்ள மேடையினை அமைத்தி ருக்கிறார்கள்.

இந்த மேடையின் வழியே கழகத் தலைவரும் முதல்வரும் இலட்சக்கணக்கான வாக்குச்சாவடி பிரதிநிதிகளின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு மத்தியிலே அவர்களுடைய இன்முகங்களைப் பார்த்துக் கொண்டே பொங்கிடும் தன் மகிழ்ச்சியை அவர்களோடு பரிமாறிக் கொண்டே மேடையை நோக்கி வரத்தக்க அளவிற்கு ஒரு பிரம்மாண்ட ஏற்பாட்டை அமைச்சர் மூர்த்தி அவர்கள் திட்டமிட்டு செய்துள்ளார்!

இந்த மேடையின் வழியாக முதல்வர் அவர்கள் வரும்பொழுது எல்லாத் தொண்டர்களின் முகங்களிலும், மகிழ்ச்சி ஆரவாரங்களையும், நேரடியாக காண்பதற்கான ஒரு சிறந்த வாய்ப்பாக இந்த மேடைத் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது. தென்மாவட்டங்களி லிருந்து 58 தொகுதிகளைச் சார்ந்த லட்சக்கணக்கான வாக்குச்சாவடிப் பிரதிநிதிகள், உண்பதற்கு உணவு அவர்கள் கைக்கு நேரடியாக சென்று சேரும்படி ஏற்பாடுகள் மிக நுணுக்கமாக செய்யப்பட்டுள்ளது. வழக்கம் போல் அமைச்சர் மூர்த்தியின் உணவு அனைவரையும் மகிழ்விக்கும் சிறந்த உணவாக இருக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை!!

தேசிய நெடுஞ்சாலையிலிருந்து இந்த மேடையைத் திரும்பிப் பார்த்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய “எஃகு” கோட்டையைப் போல தோற்றமளிக்கும். கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் கருப்பு சிவப்பு வண்ணக் கொடிகளின் அசைவுகள் நம் கண்களுக்கு விருந்தாகத்தக்க வகையில் கொடிகள் காற்றில் அலைமோதி கொண்டிருக்கிறது. மேலும், காலத்தின் நிறம் கருப்பு-சிவப்பு என்பதை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

இந்த மாநாடு 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் தென்மாவட்டங்களின் பெருத்த வெற்றிக்கும், முதல்வரின் புகழ்கொடியை இந்திய அரசியல் அரங்கத்தில் உயர்த்திப் பிடிப்பதற்கு கட்டியம்கூறும் மாநாடாக அமையும்! அதுமட்டுமல்ல, இந்த ஏற்பாடுகளை வெற்றிகரமாக செய்து முடித்த செயல்வீரர் மாவட்டக் கழகச்செயலாளர் அமைச்சர் மூர்த்தி அவர்கள் பாராட்டுக்குரியவராவார்.

**இந்த மாநாடு வீணர்களை விரட்டிடும் ஓர் வெற்றி மாநாடு!**

**வாழ்க! முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்!**

**தொலைந்து போகட்டும் பாசிசம்-தொடரட்டும் திராவிட மாடல் ஆட்சி!!**



முதலமைச்சர் அவர்களால் 16.2.2026 அன்று கானொலி காட்சி வாயிலாக சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டத்திற்குட்பட்ட தாயமங்கலம் கிராமத்தில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் கட்டப்பட்டுள்ள வீடுகள் திறப்பு விழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் பங்கேற்று சிறப்பித்து, வீட்டு சாவிகளை முகாம் வாழ் தமிழர்களுக்கு வழங்கினார். உடன் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி ரவிக்குமார் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் , சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் செல்வி தே.ஜெஃபி கிரேசியா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் திருமதி இந்துமதி, திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், மானாமதுரை நகர்மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி உட்பட பலர் உள்ளனர்.

# தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## அமைச்சர்கள் கலந்து கொண்டனர்!

*சென்னை, பிப். 20 -*

*தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர் (19.02.1855 - 28.04.1942) அவர்களின் தமிழ்த் தொண்டினைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் பிப்ரவரித் திங்கள் 19ஆம் நாளன்று தமிழ்த் தாத்தாவின் திருவுருவச் சிலைக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் மாலை அணிவித்து மலர்வணக்கம் செய்யப்பட்டு வருகிறது.*

*வான்புகழ் தமிழையும் வங்கக் கடற்காற்றையும் தமிழ் மூச்சுடன் உலகுக்கு உவந்தளித்த மகாமகோ பாத்தியாய, மகாவித்துவான் உத்தமதானபுரம் வே.சாமிநாதையர் - டி.லிட் அவர்களின் 172ஆம் பிறந்தநாளான 2026 பிப்ரவரித் திங்கள் 19ஆம் நாளான நேற்று (வியாழக்கிழமை) சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் எழுபத்து எட்டு ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட திருவுருவச் சிலைக்கு காலை 9.15 மணிக்கு மலர்வணக்க நிகழ்ச்சி நடைபெற்றது.*

*திராவிட வித்யா பூஷணம் உ.வே.சாமிநாதையர் 17 ஆம் வயதில் தஞ்சாவூர் திருவாவடுதுறை சைவ ஆதீனத்தில் தமிழ் கற்பித்துக் கொண்டிருந்த புகழ் பெற்ற மகாவித்துவான் என அழைக்கப்பட்ட தமிழறிஞர் திருச்சிராப்பள்ளி மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் ஐந்தாண்டுக் காலம் பயின்று தமிழறிஞராக மிளிர்ந்தார். தொடக்கத்தில்கும்பகோணத்திலிருந்த கல்லூரி ஒன்றில் ஆசிரியராகப் பணியில் இருந்த உ.வே. சா. அவர்கள், பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியில் (1903 - 1919) பேராசிரியராகப் பணிபுரிந்தார். அழிந்து போகும் நிலையில் ஓலைச் சுவடி களிலிருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றையும் தேடித்தேடி, அச்சிட்டுப் பதிப்பித்தார். அச்சுப் பதிப்பிக்கும் பணியினால் தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், செழுமையையும் அறியச் செய்தார்.*

*90க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சுப் பதித்தது மட்டுமின்றி 3000க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்து ஏடுகளையும் சேகரித்திருந்தார்.*

*பத்துப்பாட்டு, எட்டுத் தொகையில் ஐந்து நூல்கள், சீவக சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய பழந்தமிழ் நூல்களையும் பல்வகை சிற்றிலக்கியங்களையும் பதிப்பித்தார். தாம் பதிப்பித்த ஒவ்வொரு நூலிலும் தம் புலமை மாட்சியை முன்னுரையில் தெளிவாகப் புலப்படுத்தினார். குறுந்தொகைக்கு உ.வே.சா. உரையெழுதிய பொழுது அவருக்கு வயது எண்பத்திரண்டு. நூறுப் பக்கத்தில் ஆராய்ச்சி முன்னுரை எழுதியிருப்பது பதிப்பிற்கு அணிகலனாகத் திகழ்கிறது. உ.வே.சா. ஒரு பல்துறைக் களஞ்சியம், உரையாசிரியர், உரைநடை ஆசிரியர், நூலாசிரியர், பதிப்பாசிரியர், பேராசிரியர், பாடலாசிரியர், இசைக்கலைஞர் எனப்பல பாங்குகளில் தம் தலைமை மாட்சியை நிறுவியவர்.*

*செந்தமிழ்த் திலகமாய்த் திகழ்ந்த அவரின் நினைவு நீங்காது நிற்க அவர் மறைந்து ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அவர் பணியாற்றி ஓய்வு பெற்ற சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தின் வாயிலில் அவரது தமிழ்ப் பணியைப் போற்றும் விதமாக 1948, மார்ச் 7 ஆம் நாளன்று உ.வே.சா. வின் உருவச்சிலை நிறுவப்பட்டது. அதில் அவர் வாழ்நாளில் பெற்ற பாராட்டுகள் யாவும் குறிக்கப்பட்டதுடன் மகாகவி பாரதியாரின் வாழ்த்துப் பாடலின் இறுதி இரு வரிகளும் பொறிக்கப்பட்டுள்ளது.*

*உ.வே.சாமிநாதையரின் நினைவினைப் போற்றும் வகையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு உயர் அலுவலர்களும், தமிழறிஞர்களும், பொதுமக்களும் மலர் வணக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*இந்நிகழ்ச்சிக்கான முன்னெடுப்புகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டிருந்தது.*

## தென்காசி வடக்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்! வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் தென்காசி வடக்கு மாவட்டத்தில், ஒரு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

தென்காசி வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 20 ( வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.”

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் தென்காசி வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கே.பி.கே. தங்கவேலு**

**பிப்ரவரி 20 (2017)**



**ஆலங்குடி பகுதியில், கிளைச் செயலாளராக கழகப் பணியாற்ற துவக்கிய இவர், ஆலங்குடி வட்ட துணைச் செயலாளர், திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து பணியாற்றிய இவர், மறைவெய்தியபோது புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றினார்.**

**பாத்தம்பட்டி ஊராட்சி தலைவராகவும், திருவரங்குளம் ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் மகாகவி பாரதியார் நூற்றாண்டு பெண்கள் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்து மருத்துவ பயனாளிகளுக்கு வழங்கப்படும் சேவை குறித்து பார்வையிட்டு பயனாளிகளுக்கு முகாமின் அட்டை மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார்.நிகழ்வில் நவநீத கண்ணன், ராதாகிருஷ்ணன், அன்புராஜன், இம்மானுவேல், எட்டையாபுரம் ராமலட்சுமி சங்கரநாராயணன் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதி சார்பில் மதுரை மாட்டுத்தாவணி செய்தியாளர் அரங்கில் இயங்கி வரும் கலைஞர் நூலகத்திற்கு மதுரை ஒத்தக்கடையை சேர்ந்த வழக்கறிஞர் ஸ்ரீ ராக் விக்னேஷ்நீட் தேர்வுக்கான மாணவர்கள் பயன்பாட்டிற்கு புத்தகங்களை மதுரை செய்தியாளர்கள் சங்க பொருளாளர் சுப்பிரமணியிடம் வழங்கினார்.